மூலிகை மணி

வேலூர் மருத்துவர் :- ஸ்ரீ இராம கண்ணப்பர்

மலர் 10] பிரமாதீச ஹு — தை மீ [இதழ் 3

[168-வது மூலிகை]



சுவர்ணப்பட்டி

விலை
50-காசு

உ

முருகா.

'மூலிகை மணி'

(சித்த மருத்துவ மாத இதழ்)

ஆசிரியரும் அச்சிட்டு வெளியிடுபவரும்,

வேலூர் மருத்துவர் ஆ. இரா. கண்ணப்பர், R.M.P.

ஆண்டு சந்தா ரூ. 6—00 தனி இதழ் : 50-காசு

தை மாத இதழில்

1.	நாதத்தின் ஒலி இயக்கும் நாதனே!	(பாட்டு) ...	1
2.	கார்ட்டூன்	...	2
3.	சித்த மருத்துவர்களே! கேளுங்கள்!	...	3
4.	நம் நாட்டு மூலிகைகள்	...	9
5.	நோயும்-மருந்தும்	(கேள்வி-பதில்) ...	13
6.	மூலிகை அகராதி	...	22
7.	மருத்துவப் பழமொழிகள்	...	24
8.	மேகநோய்க் கிடங்கொடேல்	...	25
9.	மணி மொழிகள்	...	28
10.	சித்தர் இலகு மருத்துவம்	...	29
11.	அனுபவம் உணர்த்தும் உண்மை	...	31
12.	இதய ஒலி	...	32

நன்றி அறிவிப்பு!

பொங்கல், புத்தாண்டு வாழ்த்து அனுப்பிய அன்பர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

— ஆசிரியர்

தொலைபேசி எண் : 726. த. பெ. எண் : 126

69, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-1 (வ. ஆ.)

உ
முருகா.



நாதத்தின் ஒலி இயக்கும் நாதனே!


தளை பட்ட பந்தம்
கிளை பட்டு தொடரும்
துளை பட்டு சிதற — அருள்வாய் முருகா

வள்ளியுட னுறையும் வள்ளலே
எள்ளி நகையாடாமல் நீ
துள்ளி வருமயில் மீதேறி — ஓடிவா குமரா

வாயார வாழ்த்துகிறேன்
ஓயாமல் சிந்திக்கிறேன்
சேயான எனக்கு உன் — காட்சி தருவாய்

வேதாந்த தேசிகனே
வேதத்தின் உட்பொருளே
நாதத்தின் ஒலி இயக்கும் — நாதனே!

(A. K. கோவிந்தராசன், கல்லாவி, தருமபுரி மாவட்டம்)


இந்தாப்பா, இதை அணிந்து துரை மாதிரி இரு!
?!
இநதிய மருத்துவர்
ஆங்கில முறை
தேகரு

ஐந்துகரத்தனை யானைமுகத்தனை இந்தினிளம்பிறை போலுமெயிற்றினை
நந்திமகன்றனை ஞானக்கொழுந்தனை புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

மூலிகை மணி

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே. — (தாயுமானவர்)

மலர் 10] பிரமாதீச ஹூ — தை மீ ஜனவரி-74 [இதழ் 3

சித்த மருத்துவர்களே! கேளுங்கள்!!

இந்திய உபகண்டத்திலே குடியரசு தின விழா அண்மையில் கொண்டாடப் பெற்றது. ஒவ்வொரு மாநிலமும் கொண்டாட்டத்தில் ஈடுபட்டு மகிழ்ச்சியை பல துறைகளில் பங்கேற்று ஊக்கம் காட்டியது. அது போலவே நமது தமிழ் மாநில அரசும் ‘குடியரசு தினத்தை’ வெகு விமரிசையாகக் கொண்டாடியதை செய்தி வாயிலாகவும், வானொலிப் பரப்பு வாயிலாகவும் கண்டும், கேட்டும் ஆனந்தமடைந்தோர் அநேகம்.

ஆனால் தமிழ் மருத்துவர்கள், சித்த மருத்துவத் துறையில் ஈடுபட்டு, “தமிழ்ச் சித்த மருத்துவமும், அந்தக் கலையும் வளர வேண்டுமென்று தமது உடல் - பொருள் - ஆவி அனைத்தையும் செலவிட்டவர்கள்”. அவர்கள் அரசுத் துறை அலுவலர்களிலும், தனியாக பாடுபட்டவர்களிலும் சரி, மேதைகளாக இருப்பவர்கள், இந்த குடியரசு விழாவில் மகிழ்ச்சியடையத் தக்க நிகழ்ச்சிகள் ஏதும் நடக்கவில்லையே! என்பதை உய்த்து உணர்ந்தவர்கள் வருந்தாமலிருக்க முடியாது.

காரணம் என்ன? குடியரசு தின விழாவிலே பல்வேறு துறைகளில் வல்லுனர்களாக விளங்கும் கலைஞர்கட்கு (விருது) பட்டமளித்து சிறப்பு செய்வது வழக்கு. ஆனால், இந்த வாய்ப்பு இதுவரை (ஆண்டு தோறும் நடந்த குடியரசு தின விழாக்களில்) சித்த மருத்துவக் கலைஞர்கட்கு உண்டாகவில்லை!

இந்த ஆண்டிலாவது, "சித்த மருத்துவக் கலைஞர்கட்கு சிறப்புச் செய்வார்கள்" என்று எண்ணியவர்கள் — ஏமாற்றமடைந்தது தான் மிச்சம்!

இதற்கு மாருக, ஆயுர்வேத வைத்திய பண்டித சிரோன்மணிகள் இருவருக்கு, இந்தக் குடியரசு தின விழாவிலே, தமிழ் மாநில விருதுகளை தமிழக அமைச்சர்கள் முன்னிலையில், தமிழக ஆளுநர், ஆயுர்வேத வைத்தியர்கட்கு 'விருதுகளை' வழங்கி சிறப்புச் செய்துள்ளார்கள். இந் நிகழ்ச்சியை அன்றே வானொலியில் ஒலிபரப்பும் செய்துள்ளனர்.

நமது தமிழக அமைச்சர்களுக்காகட்டும், அல்லது அவர்களுடன் அமர்ந்து சமர் புரியும் ஆளும் கட்சி சட்ட மன்ற உறுப்பினர்களுக் காகட்டும், எதிர் வரிசையில் நின்று ஆளும் கட்சியினரை எதிர்த்து வசை பாடும் பல்வேறு கட்சி சட்ட மன்ற உறுப்பினர்களுக்காகட்டும், இந்த சித்த மருத்துவர்கள் எங்கே? ஏன்? அவர்களில் ஒருவருக்காவது மாநில குடியரசு விழா நிகழ்ச்சியில் விருதுகள் வழங்கப்படவில்லை? ஆயுர்வேத வைத்தியர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டது ஏன்? இது ஓரவஞ்சனை அல்லவா? என்று கேட்கத் துணிவு இல்லை!

இந்த சம்பவத்தை ஒரு சட்ட மன்ற உறுப்பினரை நண்பர் என்ற முறையில் அணுகி கேட்டபோது, அவர் கூறிய பதில் என்ன தெரியுமா? விருதுகள் சும்மாவா கிடைக்கும்? விருதுகளைப் பெற விரும்புவோர் "ஒர்க் பண்ணனும் சார்" என்று சொன்னுர். இப்படி தான் ஆயூர் வேத வைத்தியர் தனக்காக மேலிடத்தில் 'ஒர்க் செய்ய சொல்லி' தான் விருது கிடைத்தது என்ருர். எப்படி இவர் வாதம்? இப்படி வெட்கம் கெட்ட விருதை சிபார்சு பிடித்து வாங்க எந்த தமிழ் சித்த மருத்துவனும் விரும்பமாட்டான்! தானுக கனியாத கனியை தடிகொண்டு அடிப்பதை போல, இந்த வரட்டு கவுரவம் தேவையில்லை!

ஆனல் சித்த மருத்துவம் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத, தமிழகத்திற்கே உரிய தமிழ் மருத்துவக்கலை. இந்தக் கலை தற்போது (20) இருபதாயிரத்துக்கு மேலும் பரம்பரையாகவும், படித்துப் பட்டம் பெற்ற மருத்துவர்களும், முறையாக அரசினர் மருத்துவ மனைகளிலும் சேவை செய்து வரும் சித்த மருத்துவர்களில் - ஒருவர் கூடவா? இந்தக் குடியரசு தின விழாவிலே, 'மாநில விருதுக்கு' அருக்தையுள்ளவராக இல்லை!

இத்த சம்பவத்தை உள்ளபடியே நினைத்து வேதனை படும் தமிழ் சித்த மருத்துவர்களை ஆறுதல் கூறுபவர் யார்? இப்படியே ஒவ்வொரு

நிகழ்சிகளிலும் 'சித்த மருத்துவம்' ஒதுக்கப்பட்டு, கழிக்கப்பட்டு வருவதை எவ்வளவு நாள் சகித்துக் கொண்டிருப்பது?

சித்த மருத்துவர்களே! கேளுங்கள். உங்கள் தொகுதியில் நீங்கள், 'ஓர்க் செய்து' எம்.எல்.ஏ., களாவும், அமைச்சர்களாகவும் ஆக்கி சட்டமன்றத்திற்கு அனுப்பி வைத்தீர்களே! அவர்கள் விட்டு எதிரிலே, அமைதியான முறையிலே, அணிவகுத்துப் போய் நின்று கேளுங்கள். "ஐயா உங்களுக்கு நாங்கள் ஓர்க் செய்து சட்ட மன்றத்திற்கு அனுப்பினேமே" ஓராண்டிலாவது ஒரு தமிழ்ச் சித்த மருத்துவனுக்கு விருது கிடைத்துள்ளதா? நாங்கள் என்ன பாவம் செய்தோம்? இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட எங்கள் மத்தியில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கும் வடநாட்டு ஆயூர்வேத வைத்தியர்கட்கு மட்டும் தமிழகத்தில் விருதுகள் வழங்க எப்படி சகித்துக்கொண்டு அங்கு இருந்தீர்கள்? இது உங்கள் உடன்பிறப்புக்கு செய்த துரோகம் அல்லவா? என்று கேளுங்கள்!

இது தமிழகத்திற்கே ஏற்பட்ட மானக்குறைவு தான்
என்று சுட்டிக் காட்டுங்கள்!

அஞ்சலி கடிதம்!

5—1—74
கோவை-19.

பெருமதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்களுக்கு, வணக்கம்.

தங்கள் வளர்ப்பு அன்னை


ஜீவரத்தினம் அம்மையார் அவர்களின்

இரண்டாம் ஆண்டு நினைவு நாளாகிய 6—1—74ல் அன்னார் ஆத்மா சாந்தியடையவும், அன்னாரின் அருளுடம்பு தங்களுடன் இருந்து, தங்கள் மருத்துவத் தொண்டினுக்கு உதவி புரியவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

இவண் :

எம். எஸ். பாக்கியராஜ்,
மூலிகை மணி வாசகர் வட்டம், கோவை-19.

G. D. நாயுடு மறைவு!



Mr. G. D. NAIDU
Born: 23-3-1893 Expired: 4-1-1974

கடந்த 4—1—1974ல் தமிழகத்தின் தனிப்பெரும் தொழிலதிபர்; சித்த மருத்துவ மேதை மறைந்தார். அவர் சித்த மருத்துவத்தை வளர்க்க அரும்பாடு பட்டார். அவர் இழப்பு சித்த மருத்துவத்திற்கு பேரிழப்பாகும். பல தடவை மூலிகை மணி நடாத்திய கண்காட்சியிலும், கருத்தரங்கிலும் அவர் கலந்துக்கொண்டு ஊக்கமளித்து வந்ததை நாம் மறக்க முடியாத நினைவுகள் ஆகும். அன்னாரை இழந்து தவிக்கும் தமிழக மக்களுக்கும், அவரது மகன் G. D. கோபால், மற்றும் குடும்பத்தினர் அனைவருக்கும் மூலிகை மணியின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

— ஆசிரியர், மூலிகை மணி.

மணமகன் : க. வேங்கடேசன், எம்.ஏ.,பி.எஸ்ஸி.,

மணமகள் : உருக்குமணி, பி.ஏ.,பி.டி.,

தமிழ்த் திருமண நிகழ் நிரல்.

நேரம் : 10—2—74 ஞாயிற்றுக்கிழமை காலை 7-45 — 9-15 மணி

இடம் : திருத்தணி வேலூரார் வணிக வைசிய சத்திரம் (திருக்குளம் எதிரில்)

1. முன்னவனுரை மஞ்சளிலும், அம்மையப்பரைக் குடங்களிலும் எழுந்தருளுவித்து, புத்தாடை மணமலர்மாலை வைத்து அருள் வேண்டிப் பெறல்.
2. புத்தாடை, மாலைக்கு, அவையினரின் வாழ்த்துப் பெறல்.
3. மணமகனும், மணமகளும், ஒவ்வொருவராய் மணவறைக்கு வந்து, புத்தாடை மாலை பெற்று போதல்.
4. ஐந்து வாழ்வரசியர், மணவறையில் அரசாணிக்கால் நாட்டுதல்.
5. புத்தாடை மாலைபூண்டு மணமக்கள் மணவறையில் வந்தமர்தல்.

5—(அ) மணப்பொங்கல் வழிபாடு.

6. திருநீறு அணிதல் ஐந்தெழுத்து ஓதல்.
7. இருவரும் இல்லறம் ஏற்பம் என, மணமக்கள் காப்புக் கட்டிக் கொள்ளல்; அரசாணிக் காலுக்கும் காப்புக்கட்டுதல்.
8. அவரவர் பெற்றோர்க்கு மணமக்கள் பாதபூசை செய்தல்.
9. மணமகள் பெற்றோர் மணமகளின் வலக்கையை, மணமகன் பெற்றோர் முன், மணமகனின் வலக்கையில் வைத்து, ஒப்படை செய்தல்.
10. மணமக்கள் முன்னவனுரையும், அம்மையப்பரையும் மலர்தூவி வழிபடல்.
11. மங்கலநாணை இறைவன் முன் வைத்துப் படைத்து அவையினரின் வாழ்த்துப் பெறல்.
12. அழல் வடிவில் இறைவனை வழிபடுதல்.
13. மங்கலநாண் சூட்டல்.
14. மாலை மாற்றிக் கொள்ளல்.
15. மும்முறை வலம் வருதல் — அம்மி மிதித்தல், காலாழி அணிதல்— மணமகள் உடன் பிறந்தான் பொரிவழங்கல் — பொரிமோதிரம் இடப்பெறல்.
16. மணமக்கள் உறுதிமொழி யேற்றல்.
17. மணமக்கள் மாறியமர்தல்.
18. அரிசி வாழ்த்து.
19. மணமக்கள் மாறியமர்ந்து, காப்பு அவிழ்த்திடல்.
20. வலம்வந்து மணவறைக்கு முன்புறம் மணமக்கள் நாற்காலிகளில் அமர்தல்.
21. நல்லோர் மணமக்களை வாழ்த்திடல்.

[பின்புறம் காண்க]

நல்லோர் வாழ்த்து!

10—2—74 ஞாயிறுக்கிழமை காலை 9-15 மணி முதல்,

வரவேற்புரை : திரு. ம. வி. சுதாகர், எம். ஏ.,
துணைப்பேராசிரியர், ஊரிசுக் கல்லூரி, வேலூர்.

வாழ்த்துரை வழங்கும் அருளாளர்கள் :

அருள்மொழியரசு. திருமுருக. கிருபானந்தவாரியார் சுவாமிகள்

ஆட்சி மொழிக் காவலர், கீ. இராமலிங்கனுர், எம். ஏ., அவர்கள்

கல்விநெறிக் காவலர்,
மாண்பமை. நெ. து. சுந்தரவடிவேலு, எம்.ஏ.,எல்.டி., அவர்கள்
(துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம்)

பேராசிரியர். அ. மு. பரமசிவானந்தம், எம்.ஏ.,எம்.லிட்., அவர்கள்
(தமிழ்த்துறைத் தலைவர், பச்சையப்பர் கல்லூரி, சென்னை)

நூலறி புலவர்,
டாக்டர். ந. சஞ்சீவி, எம்.ஏ.,எம்.லிட்., பி.எச்டி. அவர்கள்
(தமிழ்த்துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்)

டாக்டர். சி. பாலசுப்பிரமணியம், எம்.ஏ.,எம்.லிட்.,பி.எச்டி.,
(தமிழ்த் துணைப்பேராசிரியர், சென்னைப் பல்கலைக்கழகம்)

டாக்டர். பு. மு. வேணுகோபால், எச்.பி.ஐ.எம்.
(இயக்குனர், இந்திய மருத்துவத் துறை, சென்னை)

பேராசிரியர், திரு. அதிசயநாதன், எம்.ஏ.,
(துணை முதல்வர், ஊரிசுக் கல்லூரி, வேலூர்)

பேராசிரியர், எஸ். சுந்தரராசன், பி.எஸ்ஸி., (ஆனர்ஸ்)
(பௌதிகத் துறைத் தலைவர், ஊரிசுக் கல்லூரி, வேலூர்)

திரு. மு. பெருமாள் முதலியார், வேலூர். வ.ஆ.

காலை 10-30-மணிக்கு மேல்

அருள்மொழியரசு, திருமுருக. கிருபானந்தவாரியார் சுவாமிகள்

"வள்ளித் திருமணம்"

என்னும் தலைப்பில் விரிவுரை ஆற்றுவார்கள்.



'சுவர்ணப்பட்டி'

(168-வது மூலிகை)

சுவர்ணப்பட்டி என்ற இம் மூலிகை ஒரு குத்து மர (சிறுமர வகுப்பு) இனத்தைச் சார்ந்தது. தமிழகத்திலே — கோவில்கள் தோறும், நகரங்களிலும் வைத்து வளர்க்கும் கவர்ச்சி மிக்க செடியாகும். இது ஏறத்தாழ மருதோன்றி மரம் உயரமாக வளரும். இதன் இலைகள் நீளமாகவும், காம்பின் முனையில் ஓர் இலையாகவும், கீழே இரட்டையாகவும் விட்டு அரிவாள்முனை போலவும் வளரும். மலர் மஞ்சள் நிறமாகவும், காய் கொத்தவரைப் போல் நீளமாகவும் வளரக் கூடியது. பரமனடி பாடும் பக்தர்கள், இதன் இலை, மலர்களை அன்புடன் இறைவனுக்கு அர்ப்பணம் செய்யவே இந்த சுவர்ணப்பட்டியை வீடு தோறும் வைத்து வளர்த்து வருகின்றனர்.

பொதுவாக ஒரு மூலிகையின் இலையின் பக்கங்களில் அரிவாள் முனைப்போல இருக்கும் இனங்களுக்கு தனித்தன்மையான குணங்கள் உண்டு என்பதை, முன்பு ஒரு சமயம் 'தினமணி சுடரில்' எழுதி வந்தபோது குறிப்பிட்டது நினைவு

இருக்கலாம். அந்த வகையில் வேப்பிலை, அரிவாள்முனைப்பூண்டு, சிறுசின்னி போன்றவை சிறப்பு வாய்ந்தது எனலாம். அதே போல எந்த மூலிகைக்கு அதன் மலர் நிறம் மஞ்சள் ஆக உண்டோ அவைகட்கெல்லாம் மருத்துவ சிறப்புக் குணம் உண்டு என்பதை உணர்த்தும்.

பொதுக் குணம்

சுவர்ணப்பட்டிக்கு: பொதுவாக பித்தநீர் பெருக்கும் குணமும், வாந்தியுண்டாக்கச் செய்யவும், மலத்தை உடைத்து தள்ளவும் சக்தி கொண்டது. மேலும் உடலுக்கு சூட்டைத் தந்து, வீக்கங்களைக் கரைக்கவும், நுட்புழுக்கொல்லியாகவும் பயன்படுகிறது.

இலை

(1) இலையை தண்ணீர்விடாமல் அரைத்து ஆருத ரணங்களுக்கு மேலே போட்டு வர அவை ஆறும்.

(2) இலையைக் குடிநீரிட்டுக் காய்ச்சி 100 மில்லி. உள்ளுக்குக் குடித்து வர வாந்தியுண்டாக்கும்; மலச்சிக்கல் அறுக்கும்; உடலில் உள்ள பூச்சிகள், மலப்புழுக்கள் மலத்துடன் வெளியாகிவிடும்.

வீக்கங்கள் கரைய

இலையை ஆமணக்கெண்ணெய் விட்டு வதக்கி இளஞ்சூடாக வைத்து கட்டிவர அவை கரைந்து விடும்.

காமாலை நீங்க

சுவர்ணப்பட்டியின் பூ 4 மட்டும், கரிசலாங்கண்ணி 1 கைபிடி இலை எடுத்துக்கொண்டு 1 குவளை நீர் விட்டு 4 மிளகு தட்டிப்போட்டுக் காய்ச்சிய குடிநீர் அரை குவளையாக காலை மாலை குடித்துவர, நாட்பட்ட காமாலையும் தீரும்.

இன்னும் அநேக வழக்கு முறைகள் மறைந்து போயின என்றாலும் தமிழ் மக்கள் இந்த மலரை இறைவனுக்கு அர்ப்பணம் செய்வதை மட்டும் மறக்காமல் செய்கின்றனர்.

வாசக அன்பர்கட்கு மட்டும்

எமது தயாரிப்புகள் :

அக்டோபர்—'73 முதல்

* [விலைவாசிகள் ஏற்றக் காரணத்தால் சிறிது விலை கூட்டப்பட்டுள்ளது]

முக்கூட்டு கற்ப மூலிகைத் தைலம்

எண்ணெய் ஸ்நானத்திற்கு ஏற்றது. தேக வலிமையும் உண்டாக்கி உடல் சூட்டைத் தணித்து, ஆரோக்கியத்தைத் தரும்.

ஒரு புட்டி விலை ரூ. 5—00

மருதோன்றித் தைலம்

தலைமுடி கொட்டுபவர்களுக்கு ஏற்றது. தலை முடி கொட்டுவதை நிறுத்துவதுடன் கருமையாக தலைமுடியை வளர வைக்கும்.

ஒரு புட்டி விலை ரூ 5—00

மூலிகை பேதி மாத்திரை

மலசசிக்கல், மலப்புழு உள்ளவர்கள் மாதம் ஒரு முறை சாப்பிடலாம் குழந்தை முதல் பெரியோர்கள் வரை பயமின்றிச் சாப்பிடலாம்.

25 மாத்திரை விலை ரூ. 3—00

வல்லாரைத் தைலம்

மண்டை வறட்சி, ஞாபக மறதி, வழுக்கைத்தலை, அதிஉஷ்ணம், பித்தம் ஆகியவை நீங்கி தேகம் குளிர்ச்சியாகும்.

ஒரு புட்டி விலை ரூ. 5—00

முசுமுசுக்கைத் தைலம்

தலைக்குத் தடவிவர சகல உஷ்ணமும் நீங்கும். பீனிச நோய். அகால ரோமம் உதிர்தல், ஆஸ்துமா, காச நோயுடையவர்களுக்கு ஏற்றது.

ஒரு புட்டி விலை ரூ. 5—00

கருவேலன்பட்டை பற்பொடி

தினசரி உபயோகத்திற்காகவும், பல்லுறுதிக்கும். பல் தூய்மைக்கும் சிறந்தது கருவேலன்பட்டை பற்பொடி.

ஒரு பாக்கெட் விலை ரூ 1—00

காது நோய் எண்ணை

காதில் சீழ் வடிதல், இரத்தம் வருதல், காது வலி, விக்கம் ஆகியவைகளுக்கு சிறந்த மூலிகைகளால் தயாரித்தது.

ஒரு புட்டி விலை ரூ. 3-00

வல்லாரைத் திப்பிலி

பள்ளி செல்லும் இளம் மாணவ மாணவியர்களின் ஞாபக மறதி நீங்கி, கவனமாய்ப் படித்து தேர்வு எழுதி முதன்மையாகத் தேறலாம்.

40 நாள் மருந்து பாக்கெட் விலை ரூ 4—00

பொன்னாங்கண்ணி தைலம்

அசல் பொன்னாங்கண்ணிக் கீரையால் முறைபடி தயாரித்தது கண் ஒளிக்கும், பார்வைக்கும் சிறந்தது. தலைக்கு ஸ்னானமாகவும், தினம் தடவிக் கொள்ளவும் ஏற்றது. ஒரு புட்டி விலை ரூ. 5—00

புதிய மருந்துகள் விபரம் :

தலைவலிக்கு தைலம்

அடிக்கடி தலைவலி வரும் அன்பர்கள் வாரம் இருமுறை இதனை தேய்த்து ஸ்னானம் செய்துவர படிப்படியாகத் தலைவலி நீங்கும்.

ஒரு புட்டி விலை ரூ. 5—00

புழுவெட்டு நீங்கத் தைலம்

தலையில் வரும் புழுவெட்டு, பொடுகு, ஆகியன நீங்க இதனை தினமும் தலைக்குத் தடவி வரலாம். ஒரு புட்டி விலை ரூ. 5—00

பித்தத்திற்குச் சூரணம்

காபி, டீ, புகையிலை மற்றும் பித்தம் தொடர்பான பொருள்களை அதிகமாக பயன்படுத்துவோர், இந்த சூரணப் பொடியைப் பயன்படுத்தி பித்தத்தை நீக்கலாம். ஒரு பாக்கெட் விலை ரூ. 3—50

ஆவாரைப் பஞ்சாங்க சூரணம்

நீரிழிவு நோயுடையவர்கட்கு, அந் நோயைக் கட்டுப்படுத்தவும், காபி, டீ, போன்ற பானங்கட்குப் பதிலாக இதனை காபி போல் பயன்படுத்தி நீரிழிவைக் கட்டுப்படுத்தலாம். ஒரு பாக்கெட் விலை ரூ. 5—00

செம்பரத்தம் பூ தைலம்

இளம் வயதினர்கட்கு முடி செழித்து வளர, தலைக்குத் தடவி வந்தால் இத் தைலம் துணைபுரியும். ஒரு புட்டி விலை ரூ. 5—00

தேவையான மருந்தைக் குறிப்பிட்டு, இத்துடன் தபால் செலவு ரூ. 2—00 சேர்த்து கீழ்க்கண்ட முகவரிக்கு மணியாடர் செய்தால் உடன் பார்சல் மூலம் வரிசைக் கிரமமாக அனுப்பி வைக்கப்படும்.

மருந்துகள் ஒன்றுக்கு மேல் 2 (அ) 3 புட்டிகளுக்கு ரூ. 3—00 ம், 4 (அ) 5 புட்டிகளுக்கு ரூ. 4—00 ம் தபால் செலவு சேர்த்து அனுப்பவும்.

மணியாடர் கூப்பனில் தெளிவான விலாசமும், தேவையான மருந்துகளும் விபரமாக எழுதாவிட்டால் கவனிக்க இயலாது.

முகவரி :— ஆ. இரா. கண்ணப்பர், R. M. P.

59. மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-1 (வ. ஆ.)

உ

முருகா.

நோயும் - மருந்தும்

[இப் பகுதியில் வாழ்க்கைக்கு பயன் தரும் எந்தவித கேள்விகளும் இடம்பெறும். கேள்வி கேட்பவர்களின் பெயர் அவசியமிருந்தாலன்றி வெளியிடப்படமாட்டாது. எல்லோருக்கும் பயன்படும் கேள்விகள் எதுவாயினும் சரி, அவைகட்கு முதலிடம் தரப்படும். இப் பகுதியில் ஐந்து ஆண்டுகளாக தொடர்ந்து வந்த கேள்வி—பதில்களை மருத்துவ சம்பந்தப்பட்ட வரையில் தனியாக "நோயும்-மருந்தும்" எனத் தனி நூலாக வெளியிடப்பட்டுள்ளது. தேவையுள்ள அன்பர்கள் முன்பணம் மணியாடர் அனுப்பி பெறலாம். சினிமா சம்பந்தப்பட்ட கேள்விகள் கவனிக்கபட மாட்டாது. கூடிய வரையில் மருத்துவம், சமூகம், சமயம் பற்றிய கேள்விகளுக்குத்தான் முதலிடம்]

✿ ✿ ✿

கே: என் மாமாவுக்கு வயது 40. கை, கால் எரிச்சல் காணப்படுகிறது. அதிக தூரம் நடக்க இயலவில்லை. டாக்டரிடம் காட்டி மருந்து சாப்பிட்டதில் பயன் அளிக்கவில்லை. அவர் குடிப் பழக்கம் உள்ளவர். தற்போது, அதை விலக்கி விட்டார். அவருக்கு உடல் நலமடைய ஒரு வழி கூறவும்.

ப: குடிப்பழக்கமுள்ளவர்கட்கு கை, கால் எரிச்சல் இருக்கதான் செய்யும். அதை மறந்துவிட்டது மிக நல்ல செய்தியாகும், அருகம்புல் பச்சையாக எடுத்து அரைத்து நெல்லி அளவு மிளகு 6 சேர்த்து காலை வேளை சாப்பிட்டு வர கால் எரிச்சல் நீங்கும். பித்தமிகுதியாகும் காய் கறிகளை நீக்கி விடவும். ஒரு மாதத்தில் குணமாகும்.

கே: என் வயது 13. அடிக்கடி தலை சுற்றுகிறது. இரண்டு காதுகளும் ஒரு வருடமாக கேட்கவில்லை. ஏதோ அடைத்தது போல் இருக்கிறது. ஆங்கில மருத்துவம் பயன் அளிக்கவில்லை. இதைப் போக்க தகுந்த மருத்துவம் கூறவும்.

ப: இந்த வயதில் தலை சுற்றுகிறது என்றால் அது எளிய நோய் அல்ல! மூலகாரணத்தை நேரில் கண்டறிந்த பின்புதான் மருந்து தேர்வு

செய்வது நோயை மற்றும் குணமாக்கும். இருந்தபோதிலும் மயக்கம் வரும்போது நற்சீரகம் நெருப்பில் இட்டு வரும் புகையை மூக்கு வழி இழுக்க மயக்கம் வருவது நிற்கும். பித்தம் அதிகரிக்கச் செய்யும் உணவு பண்டங்களை நீக்கவும்.

கே: எனக்கு 10 வருடங்களாக அடிவயிறு வலி இடது பக்கமாக இருந்து வந்தது. இப்போது விதை வீங்கி இருக்கிறது. மல்லாந்து படுத்தால் வலி குறைந்து விடுகிறது. வாரம் ஓரிரு முறை வலி வருகிறது. விதை பலூன் மாதிரி பெரியதாகி விட்டால், வயிற்று வலியும் அதிகமாகி விடும். நான்கு பிள்ளைகள் உண்டு. டாக்டர்கள் இதை "இரணியா" நோய் என்று சொல்லி, மைனர் ஆபரேஷன் செய்துக் கொள்ள சொல்லுகிறார்கள். மூலிகை சிகிச்சையில் இந்த நோயை குணப்படுத்த முடியுமா?

ப: கச்சக்காய் என்ற கழற்சிக்காய் பருப்பை 4 மட்டும் பசும் பாலில் சேர்த்து அரைத்து நாட்டு சர்க்கரை கலந்து தினம் ஒரு வேளை குடித்து வரவும். கழற்சி இலையை விளக்கெண்ணையில் வதக்கி விதை வீக்கத்தில் இரவில் போட்டு இளஞ்சூடாக கட்டி வரவும். இதனால உமது குறை நிச்சயமாக நீங்கிவிடும் பொறுமையும் தேவை. வாய்வு பண்டங்களை நீக்கி விடுவது. வலி தொல்லைகள் உண்டாகாது

கே: குடும்ப ஸ்திரிகளுக்கு தாய்ப்பால் சரியாக சுரக்கவும், மாத விலக்கு ஒரு வாரம், 10 நாட்கள் தள்ளி போடவும் என்ன செய்ய வேண்டும் என்பதை கூறவும்.

ப: மாத விலக்கை தள்ளி போட முடியாது. அது இயற்கை விதி. ஆனால் பால் சுரக்க அம்மாப்பச்சரிசி கீரையை அடிக்கடி சமையலில் சேர்த்து சாப்பிட்டு வரவும். மற்றும் உளுத்தம்பருப்பு, உருளைக் கிழங்கு ஆகியவைகளும் உணவில் சேர்க்க பால் சுரக்கும்.

கே: ஐயா, வீட்டில் 'பாசைப் பூச்சி' அதிகமாக இருந்து கொண்டு துணிகள், புத்தகங்களைக் கடித்து ஓட்டை போட்டு விடுகிறது. பாசைப் பூச்சியை ஒழிக்க ஒரு மூலிகை கூறவும்.

ப: நல்ல உயர்ந்த சிங்கப்பூர் சாம்பிராணியை தினமும் 1 வாரம் புகை போட்டு வரவும். வீட்டை அடிக்கடி மூலை முடுக்குகளில் சேரும் தூசிகளை சுத்தம் செய்ய வேண்டும். சாணம் கொண்டு மெழுக வேண்டும். இப்படி செய்தால் பூச்சிகள் வீட்டில் சேராது.

கே: என் நண்பர் ஒருவருக்கு வயது 20. பேருந்தில் போகும்போது வாந்தி எடுக்கிறார். இதைத் தடுக்க ஒரு வழி கூறவும்.

ப: பேருந்தில் போவதில் சிலருக்கு வழக்கமாக வாந்தி உண்டாகும் இதை நிறுத்துவதற்கு முதலில் மனதை திருப்ப வேண்டும். அதாவது மனோ தைரியம் உள்ளவர்கட்கு வாந்தி வராது. கோழை மனதுடையவர்களுக்குதான்; அவர் ஆணாயினும் பெண்ணாயினும் வாந்தி வரும். இது ஓர் வியாதி இல்லை. பித்த உடம்பினர்கட்கும் வாந்தி வரக்கூடும். இப்படிப்பட்டவர்கள் சீரகத்தை எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்து சுண்டை அளவு வாயிலிட்டு வெந்நீரில் குடித்து வர வாந்தி நிற்கும்.

கே: ஐயா, எனக்கு உடல் மிக மெலிந்துள்ளது. 'களைப்பு' உண்டாகிறது. உடல் தேறுவதற்கு என்ன செய்ய வேண்டும்?

ப: உடல் பலவித காரணங்களால் 'களைப்பு' உண்டாகும். முக்கியமாக சுய இன்பம் கண்ட இளைஞர்களுக்கும் ஓயாது உடல் உறவு கொண்ட குடும்பத்தில் உள்ளவர்கட்கும் இரவு கண் விழிப்போர்கட்கும் புகை தொழிற்சாலைகளில், ரயில் எஞ்சினில் வேலை செய்பவர்கட்கும் உடல் களைப்பு உண்டாகும். வெய்யிலில் அலைந்து திரிவோர்கட்கும் களைப்பு உண்டாகும். இவர்கட்கு தனித்தனியாக நேரில் கண்டு மருத்துவம் கூறுவது சிறப்பு ஆயினும் பொதுவாக அனைவருக்கும் களைப்பு நீங்க சீமைஅத்திப்பழம், பாதம்பருப்பு, உளுந்தம்பருப்பு, உருளைக்கிழங்கு, பால், பழங்கள், வெள்ளைப்பூசனி போன்றவைகளை அடிக்கடி சேர்த்து வர உடல் களைப்பு நீங்கும்.

கே: ஐயா, என் தாயாருக்கு 2 ஆண்டுகளாக வாய்ப் புண் ஏற்பட்டு எரிச்சலும் வலியும் இருக்கிறது. சாப்பிட முடியவில்லை. 3 மாத காலமாக 1 கால் வீங்கி பல ஊசி, மாத்திரைகள் மேற்கொண்டும் பயனில்லை. நாளுக்கு நாள் வலிமை குன்றுகிறது. மூலிகை மணியில் இதற்கொரு வழி கூறவும்.

ப: உங்கள் தாயாருக்கு வயது குறிப்பிடவில்லை. மருந்துகளோ மூலிகைகளோ வயதுக்கு ஏற்றபடிதான் குறிப்பிட முடியும். வாய்ப்புண் இருப்பது வயிற்றில் புண் இருக்கக்கூடும். தொடுதலங்காய் சட்னி நெய் விட்டு செய்து பகல் உணவில் சேர்க்கவும். மற்றபடி கால் வீக்கத்திற்கு நேரில் பார்ப்பதுதான் சிறப்பு.

கே: ஐயா, எனக்கு வயது 31. துணிக் கடையில் வேலை செய்பவன். அடிக்கடி 'வயிற்றுப் புரட்டல்' ஏற்படுகிறது. ஐஸ் போட்ட பண்டங்கள் சாப்பிட்டால் வயிற்றுப் போக்கு உண்டாகிறது. தேங்காய் எண்ணெய் தேய்த்து தலை முழுகி வந்தேன். வயிற்றுப் போக்கினால் அதை நிறுத்தி விட்டேன். சாப்பிடும் உணவும் உடம்பில் ஒட்டவில்லை. உடல் சூடு குறையவும், உடல் வலிமை பெறவும் ஒரு வழி கூறவும்.

ப: வெட்டைச் சூடு உள்ள உடம்பு தினமும் ஏதாவது ஒரு கீரையை நெய் விட்டு வதக்கி பகல் உணவில் சேர்த்து வர (1 மண்டலம்) குணமாகிவிடும். இரவில் பால் தவருமல் குடித்து வருவது நல்லது.

கே: ஐயா எனக்கு சுமார் 2 ஆண்டுகளாக மூலம் இருந்தது (வயது 24). காட்டு கருணைக் கிழங்கு புசித்த பிறகு இல்லை. ஆனால் ஆசனத்தில் சிறிது சதை வளர்ச்சி கண்டிருக்கிறது. 'அறுவை சிகிச்சை' இன்றி குணப்படுத்த எளிய ஒரு மூலிகை சிகிச்சை கூறவும்.

ப: பச்சை அருகம்புல் மட்டும் ஒரு கைப்பிடி எடுத்து மை போல வரைத்து கொட்டைபாக்களவு சாப்பிட்டு பசும்பால் குடித்து வர 20 நாளில் சதை வளர்ச்சி சுருங்கிப் போகும்.

கே: ஐயா, மயில் மாணிக்கம், மயிர் மாணிக்கம் என்பது இரண்டும் ஒன்று தானா? வெவ்வேறா?

ப: இரண்டும் தனித்தனி இனம். மயில் மாணிக்கம் பற்றி ஏற்கனவே மூலிகை மணியில் வெளிவந்துள்ளது. மயிர் மாணிக்கம் என்பது பற்றி இன்னும் வெளியாகவில்லை.

கே: பல் துலக்குவதற்கு, படிகாரத்தை தூள் செய்து சட்டியில் போட்டு, நெருப்பின் மீது வைத்தால் நீர் போல கரைந்து விடுகிறது. கரையாமல் பொரிக்க வழி சொல்லவும்?

ப: நீர் போலக் கரைந்தது பின்பு பொரிந்து ஆறிப்போகும். அதைத் தூள் செய்து பல் துலக்கவும்.

கே: என் வயது 26. கண் கிட்டப் பார்வை பாதிக்கப் பட்டுள்ளது. எனக்கு இருமல் இல்லை. T B. கிடையாது. ஆனால் எச்சில் காறி உமிழ்ந்தால் கோழையும் சிறிது ரத்தமும் கலந்து வருகிறது. மணமாகி 2 வருடமாகிறது. ஒரு குழந்தையும் உள்ளது. தங்கள் மருத்துவ ஆலோசனையை கூறவும்.

ப: கோழையும் ரத்தமும் கலந்து வருவது நுரையீரல் நோயைத் தான் குறிக்கும். எனவே, இருமல் இல்லாமல் கோழையும் ரத்தமும் வருவது கடினமான நோய்தான். 10 நாளைக்கு அருகம்புல்லை அரைத்து காலையில் சாப்பிட்ட பின்பு முசுமுசுக்கை இலையை நெய் விட்டு தொவையல் செய்து சாப்பிடவும்.

கே: எனக்கு சாப்பிட்டவுடன், நாக்கில் வெண்ணை போல கனத்துப் படிகின்றது. நாக்கை வழிக்க வேண்டியுள்ளது. இதை போக்க ஒரு வழி கூறவும். இப்படி இருப்பதால், சுவை தெரிவதில்லை.

ப: நாவில் மாவு படிவது மலச்சிக்கல். குடல் கோளாறு இருக்கும். மலச்சிக்கலை தடுக்க தினமும் மலம் கழிய வேண்டி, இரவில் வாழைப்பழம். சீமை அத்திப்பழம் போன்றவைகளை சாப்பிட்டு பால் சாப்பிட்டு வரவும் வாரம் ஒரு முறை பேதியாகும் மாத்திரைகளை சாப்பிட்டால் நாவில் மாவு சேராது.

கே: என் தாய்க்கு வயது 60 ஆகிறது. கடந்த 20 நாட் களாக சரியாக ஜீரணசக்தி ஆகவில்லை. புளியேப்பம், நாவில் வரட்சி, நெஞ்சிலேயே இருப்பது போலும் இருக்கிறது. உடல் மெலிந்து விட்டது. ஆகாரம் மிக குறைந்துவிட்டது. சில சமயம் வாந்தியும் ஏற்படுகிறது. இதை போக்க, தக்க மூலிகை மருத்துவம் ஒன்று கூறவும்.

ப: தினமும் வெறும் நொய்கஞ்சியில் மோர் கலந்து 2 வேளை கொடுத்து பிரண்டை தொவையல் நாவில் தடவி 10 நாள் வைக்க தாயாருக்கு நோய் விலகிவிடும்.

கே: எனக்கு வயது 25. திருமணமாகி 4 ஆண்டு ஆகி விட்டது. ஒரு வருடமாக விட்டு விட்டு வயிறு எரிச்சல் உண்டாகி ஒரிரு மாதம் தொடர்ந்தும் இருக்கிறது. உகந்த மூலிகை வைத்தி யத்தை கூறவும்.

ப: சஞ்சள் கரிசலாங்கண்ணியை தினமும் காலையில் அரைத்து எலுமிச்சங்காய் அளவு சாப்பிட்டு வரவும். 10 நாளைக்குள் எரிச்சல அடங்கும். குணமில்லையெனில் சித்த மருத்துவர் ஆலோசனை நாடவும்.

கே: கருவேலம்பட்டை பற்பொடியில் வேறு பொருள் கலக்கின்றதா? அவை என்ன என்ன?

ப: 8 பங்கு கருவேலம்பட்டை, 1 பங்கு உப்பு, 1 பங்கு வெள்ளெருக்கன் பூவின் பற்பம், ஆக பற்கள் வியாதிக்கெல்லாம் சிறப்பு பெற்றது

கே: பாம்பு பிடிப்பவர்கள், பாம்பு தோல் எடுப்பவர்கள் கையில் பூசிக்கொள்ளும் மூலிகை யாது? விளக்கவும்.

ப: சிறியாநங்கை என்ற மூலிகையும், சிந்தில் கொடி, ஆகாச கருடன் போன்ற மூலிகைகளைக் கைக்கொண்டு பிடிப்பார்கள் இம் மூலிகைகளை மந்திர உச்சாடனம் செய்து கொண்டு பிடிப் பார்கள்.

கே: எனக்கு திருமணமாகி 3 வருடம், 3 மாதங்கள் ஆகின்றன. முதலில் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்கு 1 வருடம் 4 மாதம் வயதாகிறது. ஆரம்பத்திலிருந்தே தாய்ப்பால் கிடையாது. 2, 3-மாதங்களுக்கு முன்பு அந்த குழந்தைக்கு, பற்கள் கிட்டிக் கொண்டு, கை கால் கண் விறைத்துக் கொண்டு, கண் விழிகள் மேல் நோக்கி போனது. பிறகு 7—9—63ல் சுரம் கண்டு ஆஸ்பத்திரி மருந்து சாப்பிட்டு குணமாகி விட்டது. ஆனால், 8—9—73ல் பழையபடி பற்கள் கிட்டிக் கொண்டு, கை கால்கள் விறைத்துக் கொண்டது. நல்ல ஆலோசனைக் கூறி இனி குழந்தைக்கு அந் நோய் வராவண்ணம் காப்பாற்றுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

ப: குழந்தைக்கு இழுப்பு நோய் வந்துள்ளது. எதற்கும் உடனே கோரோசனை மாத்திரையை தேனில் குழைத்து தரவும். தூதுவளை இலையை 2 மட்டும் பாலில் காய்ச்சி குடிக்கச் செய்யவும். சென்னையில் ஞாயிறுதோறும் வந்து தங்கி நோயாளிகளைப் பார்க்கிறேன். அப்போது உங்கள் குழந்தையை நேரில் கொண்டுவந்து காட்டவும்.

கே: நான் கல்லூரி மாணவன். கடந்த 3-ஆண்டுகளாக உடல் நாளுக்கு நாள் மெலிந்து வருகிறது. கை கால்கள் நடுங்கு

கின்றன. வயிற்றில் நீண்ட புழுக்கள் (ASCARIS) இருக்குமோ என்று அஞ்சுகிறேன். மூலிகை மணியில் கூறியபடி உணவு திட்டங்களை கையாண்டு வருகிறேன். வல்லாரைக் கீரை தினமும் ஒரு கைப்பிடி 1 மாதம் சாப்பிட்டேன். புழுக்கள் எதுவும் வெளி யேறவில்லை. உடலும் தெளிந்து குணமாகவில்லை. நல்ல பசி அடிக்கடி பசி எடுக்கிறது. ஆனால், சோர்வும் அடிக்கடி ஏற்படு கிறது. என்மீது அன்பு கூர்ந்து நல்ல மூலிகை மருத்துவத்தை கூறி என்னைக் காப்பாற்றவும். நேரில் வர இயலாதவன்.

ப: கல்லூரி மாணவரே! உங்கள் வயதை குறிப்பிடவில்லை. 3 ஆண்டுகளாக உடல் மெலிந்து, கை கால் நடுங்குவதும் மூலகாரணம் ஏதாவது இருக்கும். அவைகளையும் மறைத்தீர! ஆங்கில மருந்துகள் இனிப்பு சேர்ந்தவை அவைகளால வயிற்றில் புழு ஏற்பட்டிருக்கக் கூடும். இந்த 3 ஆண்டுகளாக உடல் மெலிந்த நீங்கள் 10 நாள் அருகம்புல் அரைத்து காலையில் சாப்பிட்டு பிறகு நேரில் வரவும். பார்த்து ஆலோசனை தரலாம்.

கே: ஐயா, ஒருவனோடு ஒருவன் சேர்ந்து கெடுவானா? ஒருவன் சொல்லை மற்றொருவன் கேட்டு தன் குடியை கெடுத்துக் கொள்வானா? இதற்குத் தகுந்த உண்மையான பதில் கூறவும்.

ப: அன்பரே! சிறுவர்கள் தான் சேர்க்கையால் கெடுவார்கள். ஒருவருக்கு தன் சுய மூளை இருக்கும்போது, மற்றவர், அவர் என்னதான் உண்மை நண்பராக இருந்தாலும் அவர் சொல்லை எல்லாம் எப்படி அவர் கேட்பார். முடியாது அப்படி அவர் சொல்லை கேட்பதானால்; ஒன்று அவருக்கு "பைத்தியம் பிடித்து இருக்கும்; அல்லது வாழ்க்கையில் சில பல காரணங்கள் அவரை குழப்பி வைத்து இருக்கும்". இந்த இரண்டும் இல்லையானால் அவர் தன்னிஷ்டப்படிதான் நடப்பார். யாரும் தன் குடியை தானே கெடுத்துக்கொள்ள மனம் துணியாது மனம் வெறுத்தால் மற்றவர்கள் போதனை 'சரி" என்று தோன்றும். ஆனால் சிந்தனை செய்தபின் அது மாறுபடும்.

கே: என் வயது 25. எனக்கு முகத்தில் அடிக்கடி வியர்வை வடிந்துக் கொண்டே இருக்கிறது. சைக்கிளில் ஏறிப் போகும்போதும், வெளியில் நடந்து போனாலும், வியர்வை வந்து கொண்டே இருக்கிறது. இதைப் போக்க மருத்துவம் கூறவும்?

ப: வியர்வை வருவது நல்லது வியர்வையை அடக்கினுல் வேறு தொல்லே வரும். அதிகப்படியாக வியர்வை வந்தாலும் கெடுதல் தான். இவைகளை கடித மூலம் எழுதி போக்கிக் கொள்ள முடியாது. காலையில் கை நாடி பார்த்து முகம், குரல், உடல் யாவும் பார்த்து தேர்வு செய்து மருத்துவம் செய்தல் சிறப்பு.

கே: சுக்கு, ஓமம், அரிசி திப்பிலி, ஏலக்காய் (அரிசி), சதகுப்பி, புதினுகீரை, இவற்றின் குணுதிசயங்களை விளக்கமாக தெரிவிக்கவும்?

ப: சுக்கு, புதினு (ஈாச்சக்கீரை) என்ற இரண்டிற்கும் தனிக் கட்டுரை எழுதி நம் நாட்டு மூலிகையில் இடம் பெற்றுள்ளது. மற்றும் உள்ளவைகள் இனி வரும் கட்டுரைகளில் வெளியாகும். தொடர்ந்து மூலிகை மணியை வாசித்து வந்தால் தெரியும்.


கே: ஐயா, என் வயது 21. என் வயிற்றில் 'நாகப்புழு' இருக்கிறது. ஒரு சமயம், இரும்பினபொழுது, வாயின் வழியாக ஒரு ஜாண் நீளமுள்ள தடிப்பான ஒரு புழு வெளியில் வந்தது. பேதிக்கு சாப்பிட சொன்னுர்கள். புழு எதுவும் வர வில்லே. வயிற்றிலோ, குடலிலோ புழுக்கள் இருக்கலாம் என்று சொல் கிருர்கள். மற்றபடி நோய் ஒன்றுமில்லே. தங்கள் மருத்துவ ஆலோசனே பெற விரும்புகிறேன்.

ப: குப்பைமேனி வேர் 1 பலம். வேப்பம்பட்டை 1 பலம். சங்கு புஷ்பம் வேர் 1 பலம். இவைகளை அரைத்து நெல்லிக்காய் அளவு காலே மாலே வாயிலிட்டு வென்னீர் குடிக்க வயிற்றில் உள்ள நாடாப்புழுக்கள் வெளிப்பட்டுப் போகும்.

கே: ஐயா, வெளி மூலம், ஆசன எரிச்சல், 2 வருடமாக உள்ளது. எனக்கு வயது 35. திருமணமாகி 6 வருடமாகிறது. இரண்டு குழந்தைகள் உள்ளன. சாதாரணமாக மலச்சிக்கல் உண்டு. மூலம் விலகி, உடல் உஷ்ணம் குறைய வழி கூறவும்?

ப: நண்டுக்கல், நத்தை, ஆமை ஓடு ஆகிய பற்பங்களை தமிழ் மருத்துவரின் துணையுடன் உட்கொண்டு, காட்டுக் கருணை இளகல் இரவில் சாப்பிட்டு, நாயுருவி இலையை விளக்கெண்ணெயில் வதக்கி வெளி மூலத்தில் கட்டி வர குணமாகும்.

உ



— முன் மாதத் தொடர்ச்சி

குன்றி

வேறு பெயர்கள் :— குண்டு மணி, குன்றி மணி, குன்றி வித்து. ஆங்கிலம் : அப்ரஸ் பிரிகா டோரியஸ், தெலுங்கு : குரிகிஞ்சா, மலையாளம் : குன்னி குரு. கன்னடம் : குல்கஞ்சி சமஸ்கிருதம் : குஞ்சா, இந்தி : குஞ்.

விபரம்

குண்டுமணி கொடி இனத்தைச் சார்ந்தது. இந்த குண்டு மணியில் வெண்மை, கருமை, சிகப்பு, மஞ்சள், நீலம் முதலிய நிறங்களைக் கொண்டது. பல இடங்களில் சிகப்புடன் கரும்புள்ளி முகப்பு கொண்ட குண்டுமணிதான் காணக்கிடைக்கும். மற்றவை காணக்கிடைப்பது அரிதாகும். இந்த குண்டுமணிகளின் எடை ஒரே அளவுள்ளதாக இருப்பதால் மருத்துவ முறையில் கூட இதன் எடையை ஒப்புதல் செய்துள்ளனர். குன்றி எடை என்றும் கூறுவர். மருத்துவப் பயனுவதிலும் குண்டுமணி சிறப்புடையது.

உபயோக உறுப்பு—இலை, வேர், விதை

சுவை—இலை :- இனிப்பு. வீர்யம் : சீதம். பிரிவு : இனிப்பு
விதை :- கைப்பு, வீர்யம் : வெப்பம், பிரிவு : கார்ப்பு
வேர் :- சிறுகைப்பு, இனிப்பு வீர்யம்: வெப்பம், பிரிவு: கார்ப்பு

குணுதிசயம்

இலை :- மலமிளக்கி காமம் பெருக்கி. கோழையகற்றி. தாபமகற்றி.
விதை :- உரமாக்கி நீர் மலம் போக்கி, நுரையீரல் நோயகற்றி.
வேர் :- வாந்தியுண்டாக்கி, மலமிளக்கி, கோழையகற்றி, நுரையீரல் நோயகற்றி.

கூத்தங் குதம்பை

வேறு பெயர்கள் :— வழக்கில் கூத்தாங் குதம்பை என்று தான் கூறுவர். இதர மொழிகளில் காணக் கிடைத்தில.

விபரம்

தென்னிந்தியாவுக்கே உரிய மூலிகையாகும். மண்டூரத்தை செந்தூரம் செய்யக்கூடிய சக்தி வாய்ந்தது இந்த மூலிகை.

உபயோக உறுப்பு

இலை, இலையின் சாறு.

சுவை : கார்ப்பு, வீர்யம் : வெப்பம், பிரிவு : கார்ப்பு

குணதிசயம்

வெப்பமுண்டாக்கி, மண்ணீரல், கல்லீரல் நோயகற்றி, மல மிளக்கி, முத்தோடமகற்றி.

கூந்தர் பனை

வேறு பெயர்கள் :— தாளிப்பனை, கொண்டைப்பனை, மலைப்பனை, ஆங்கிலம் : கார்யோடா யூரன்ஸ், தெலுங்கு : கொண்ட ஜ°லுகு, மலையாளம் : சுண்டைப் ஞ, கன்னடம் : பைஞ இந்தி : சமஸ்கிருதம் : மாரி, உருது : சலோபா

விபரம்

இந்த மரம் பனைமர வகுப்பைச் சார்ந்தது. ஆலமர விழுது போன்ற மெல்லிய விழுதுகள் இதற்கு உண்டு. ஆதலால் கூந்தர்பனை என்ற பெயராயிற்று. தென்னிந்திய மலைச்சாரல்களில் உற்பத்தியாகின்றது. ஓலை எழுதுவதற்கு பயன்படுகிறது.

உபயோக உறுப்பு—விதை, கள்

சுவை : இனிப்பு, வீர்யம் : சீதம், பிரிவு : இனிப்பு

குணதிசயம்

உடல் உரமாக்கி, காமம் பெருக்கி, மலமிளக்கி, நச்சரி.

(தொடரும்)

மருத்துவப் பழமொழிகள்!

கண்ணிற் புண்வந்தால் கண்ணாடி பார்த்தால் ஆகாது.

கடித்த நாய்க்குக் காடியைக் கொடு

கண்கெட்ட பிறகா கதிரவன் வணக்கம் செய்வது ?

கற்றாழை நாற்றமும் பித்தளை வீச்சமும் போகா.

கார்த்திகை மாதம் கருணைக்கிழங்கு கடன்வாங்கியாவது
உண்ணவேண்டும்

குமரிக்கு மூப்பில்லை ; கோவைக்குத் தோப்பில்லை.

குமரியைத் தின்றால் — குமரியை வெல்லலாம்.

குடலேற்றம் தெரியாமல் கோடி பணம் செலவழித்தால் தீருமா ?

குறத்தி பிள்ளைபெறக் குயவன் காயம் தின்றானும்!

கூழானாலும் குளித்துக் குடி ; கந்தையானாலும் கசக்கிக் கட்டு.

கைக்கோளனுக்கும் கால்புண்ணும் நாய்க்குத் தலைபுண்ணும் ஆறா.

கொடி முள்ளி நாலும் கபத்தை அறுக்கும்
(இண்டு, தூதுளை, தொண்டை, உழற்கொடி)

கோபம் பாபம் நித்திரை சத்துரு

தன்காயம் காக்க வெங்காயம் வேண்டும்

தாயைப் பிழைத்தாலும் தண்ணீரைப் பிழைக்காதே.

தின்ற மண்ணுக்குத் தக்க சோகை

திரிபலை தின்றால் துவரேறும் ; கறிவேம்பு தின்றால் பசியேறும்.

தும்மலிலே போனாலும் தூற்றலிலே போகக்கூடாது

தூதுளை ஆயுளை விருத்தி செய்யும்.

[புலவர், அ. கஸ்யபெருமாள்]

மேக நோய் பற்றிய விவரக் கட்டுரை :-

மேக நோய்க் கிடங்கொடேல்!

(VENEREAL DISEASE)

[புலவர், தே. ப. சின்னசாமி, முத்துகாபட்டி]

இதுவும் உடன் மருத்துவம் செய்தால் குணமாகிவிடும். காலந் தாழ்த்தினுல் மூளை, தண்டுவடம், இதயம், கல்லீரல் ஆகியவற்றையும் பாதிக்கும்; முடமாக்கும். இக் கிருமி 'பிராஸ்ட்டேட்' சுரப்பிக்கும், விந்து குழாய்க்கும் பரவிவிட்டால் குணமாவது கடினம். சிற்றின்பத் தாலேயே பரவுகின்ற இந் நோய் மேல் அடையாளம் இல்லாமலேயே பரவும். இந் நோயால் முழங்கால் முடங்கும்; கண்ணொளி இழக்கும்; குருதி ஓட்டத்தில் குறைபாடு - Arthiritis, தடிப்புகள் - Soft Sore, தோள் வலி, இடுப்பு வலி, அரையாப்பு கட்டி, மணற்கழலி நோய் ஆகியனவும் வரும்.

எதனுல் வருகின்றது?

இக் கொடிய நோய் எதனுல் வருகின்றது? விலை மாது, நோயாளன் பல பெண்களைப் புணருவதாலும், மிகு உடலுறவினுலும், மூலத்தில் வெப்பம் மிகுந்து தாது கெட்டு இந் நோய் உண்டாகிறது. நோயாளிகளோடு உறவு கொண்டால் 'பாலில் புரை குத்தியது போல்' நலமுடையவர்களுடைய உடலும் கெடும். நீர்த்தாரையில் நமைச்சலும், நீர்க்கசிவும் தோன்றும். பின் வெள்ளை, மஞ்சள், பச்சை, சிவப்பு நிறச் சீழாக மாறும். தாரை வீங்கி கடுத்து எரிச்சலுடன் நீர் இறங்கும். தூக்கம் கெடும். நீரடைப்பு, கிரந்தி, சூலை, முடக்குவாதம், குட்டம், நீரழிவு, அரையாப்பு முதலிய பல மேக நோய்கள் தோன்றும்.

ஆண் பெண் உறவு இன்றைய நாகரிக வாழ்க்கையில் திருமணக் கட்டுப்பாட்டைக் கடந்து எளிதாகச் செல்கிறது. கருத்தடைக் கருவியோர், மணமாகாதார், மணமுறிவுடையோர், வருவாய் போதாதார், பொது மகளிர், ஆகியவர்கள் நோய் பரவ நிறைய சந்தர்ப்பம் அளிக்கின்றனர். ஒழுக்கமற்ற ஆண் பெண்களே நோய் பரப்பும் கருவியாகின்றனர்.

ஆங்கில மருத்துவம்

சென்ற நூற்றுண்டில் Mercury மருந்தாகப் பயன்படுத்தப்பட்டது. இன்று 'பிஸ்மத்', ஆர்ஸனிக் கலவை மருந்துகளை ஊசி மூலம் செலுத்து கின்றனர். வாரம் ஒன்று விதம் 72 வாரம் ஊசி போட்டுக்கொள்ள

வேண்டுமாம். Antiblotics மருந்துகளான Sulpha, Penicillin ஆகிய மருந்துகள் இன்று வழக்கில் உள்ளன. Solution of Silver Nitrate - ம் பயன்படுத்துகின்றனர். குருதி பரிசோதனை செய்து Negative - ஆகும் வரை ஊசி போடவேண்டும். தொடக்க நிலையில் இம் மருந்துகள் குணமளிக்கின்றன. இம் மருந்துகளைத் தொடர்ந்து பயன்படுத்தினால் கல்லீரல், இரத்த உயிரணுக்கள் பாதிக்கின்றன. இம் மருத்துவத்தால் நோய் பட்டியல் தொடர் கதையாக மாறுவதைத்தான் காண முடிகிறது. இக் கொடு நோயினும் மிக்க துன்பந் தரும் இக்கேட்டினை என்னவென்று சொல்வது ?

தமிழ் மருத்துவம்

இக் கொடிய கொள்ளை நோய்க்குத் தக்க தமிழ் மருந்துகள் உண்டு ; பலனளிக்கத் தாமதமானாலும் நோயை நிரந்தரமாக வேருடன் அழிக்கும்.

(1) மருதோன்றி இலையை அரைத்து எலுமிச்சையளவு பசும்பாலில் கரைத்து வடிகட்டி 2 வேளை 3 நாள் சாப்பிட்டு பாலன்னம் மட்டும் சாப்பிட்டுவர கிரந்தி, வெட்டை குணமாகிறது.

(2) அதே போல் வெள்ளறுகு சமூலத்தை அரைத்து வெள்ளாட்டுப் பாலில் சாப்பிட்டுவர இந் நோய் குணமாகும்.

(3) அத்திப் பிஞ்சு கைப்பிடியளவு அரை முடி தேங்காய் இடித்த பாலில் வெள்ளைக் குங்கிலிய சூரணத்தை 15 கிராம் போட்டு காலையில் மட்டும் 3—6 நாள் சாப்பிட நோய் போகும்.

(4) சிவப்பு அம்மாம்பச்சரிசி (சித்திரப்பாலாடை) ஒரு கைப்பிடி அரைத்து பசும்பாலில் கலந்து காலை மாலை 3 நாள் சாப்பிட்டுவர நோய் மறையும்.

(5) நெல்லி வற்றல், பொரித்த படிகாரம், கற்கண்டு சம அளவில் சேர்த்துப் பொடித்து மோரில் சாப்பிட்டுவர நோய் குணமாகும்.

மற்றும் கற்பூராதி சூரணம், வெள்வங்க பற்பம், நாகரச பற்பம், கருவங்க பற்பம், வல்லாரைக் கிருதம், மேகத்தெண்ணெய் பிரமதண்டு எண்ணெய், சதாவரிக் கிருதம் ஆகிய சித்த மருந்துகளும் இந்நோய்களை நிரந்தரமாக குணமாக்கும்.

மேகத்திற்கிடங் கொடேல்

இத்தகு கொடிய நோய் பற்றிய அறிவு முதற்கண் அனைவருக்கும் வேண்டும். இதன் கொடுமைகளை அனைவரும் அறியவேண்டும். மறைநோய் என்பதால் மறைத்து வைக்கக் கூடாது. "புழு பொய் புண் மறைத்த கதையாகி விடும்". ஒழுக்கமற்ற ஆண்—பெண் உறவுக்கு ஒப்பற்ற இயற்கை தரும் கடுந்தண்டனையே இந் நோய்! அதனை அறிந்து, இயற்கையன்னையின் ஒறுத்தலுக்கு ஆளாகாமல் இருக்க வேண்டும். இந் நோய்க்கு மூலமான விலைமாது உறவு, நோயாளி சேர்க்கை, பல பெண் புணர்ச்சி, பல ஆண் தொடர்பு ஆகியவற்றை அறவே நீக்கிவிட்டால் மேகநோய்க் கிடங்கொடுக்காமல் வாழ வழி யுண்டு. மிக்க உடலுறவைத் தவிர்க்க வேண்டும். இந் நோய் தொற்று நோயாகையால், அத்தகையவர்களுடன் சேர்ந்து பழகுதல் வாழ்தல், அவர்கள் ஆடைகளை அணிதல், குழந்தைகளை அவர்களிடம் கொஞ்ச, முத்தம் கொடுக்க வைத்தல் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும்.

தகாத சிற்றின்ப உறவு தவிர்த்தல்; அடிப்படை பாதுகாப்பு ஆகிய இரண்டுமே மேகநோய்க்கிடங் கொடா வழியாகும்.

இயற்கையோடு இணைந்து வாழ்தல், நெறியோடு நடத்தல், சத்துள்ள காய், கனி, கீரைகளை உணவில் தவறாது சேர்த்தல், ஒருவன்—ஒருத்தி என்ற பழந்தமிழ்ப் பண்பை மேற்கொள்ளுதல், உயிர்ச்சத்து, கனிமங்கள் (Vittamins & Minarals) நிறைந்த உணவுகளை உண்டு உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை வளர்த்துக் கொள்ளுதல் ஆகிய அனைத்தும் நோய்க்கிடங்கொடா வழியாகும் என்க.

போரினும் கொடியது இந் நோய்! சமூகத்தைச் சீரழிக்கும் இந் நோய் பற்றிய அறிவுரை வீட்டுக்கும், நாட்டுக்கும் தேவை! மிகவும் அவசியமானது!! அரசும், மருத்துவ வல்லுநர்களும், பத்திரிகைகளும் இப் பணியை உணர்ந்து மேற்கொள்ளுவது நல்லது.

இக் கட்டுரையைப் படிக்கும் அன்பர்கள், இதனை பலர்க்கும் அறிவித்தால் இக் கட்டுரை எழுதியதின் நோக்கம் நிறைவுறும்!

கிரந்தி கொல்லும்! வெட்டை முடக்கும்!!

கிரந்தியைக் கொல்லுங்கள்! வெட்டையை முடக்குங்கள்!!

சமுதாயத்தை வேகவைக்கும் மேகநோய்க் கிடங்கொடேல்!

மேலாக வாழுங்கள்!!

மணி மொழிகள்!

— திருமுருக. கிருபானந்தவாரியார் சுவாமிகள்

அன்பனே!

தங்கம் மென்மையானது; இரும்பு வன்மையானது. வன்மையான இரும்புப் பெட்டியில் மென்மையான தங்கத்தை வைத்துக் காப்பாற்றுவார்கள். காவலிலிருக்கும் தங்கந் தாழ்ந்ததென்று உலகங் கருதுகின்றதா? உய்த்துணர்க!

நம்முடைய பழைய தரும நூல்களில் பெண்களுக்குச் சந்யாசம் விதிக்கவில்லை. மனைவி சற்று ஏறுமாறாக இருந்தால் கூசாமல் சந்யாசங்கொள் என்று ஆணுக்கு விதித்திருக்கின்றது. சந்யாசம் ஒரு கடின வழி. அந்தக் கடின வழியை மென்மையான பெண்மை தாங்குவது துன்பம்.

அன்றியும் சந்யாசம் என்றால் எல்லாவற்றையும் நன்றாக விடுவது என்பது பொருள். பிறந்த ஊர், உறவினர், வீடு, நண்பர் அனைவரையும் விட்டு நாதனை நாடிச் செல்வதுவே சந்யாசம். ஒரு பெண்ணும் திருமணம் ஆனவுடன் ஊர், வீடு, சுற்றம், நண்பர் அனைவரையும் விடுத்து நாதனுடன் செல்லுகின்றாள். அதுவே அவளுக்குச் சந்யாசம்.

கண்ணுக்குத் தெரிந்த இந்த உலகிற்கு சேவை செய்வதோடு, கண்ணுக்குக் காணாத கடவுளுக்கும் சேவை செய்.

ஏன் எனில், உன் மனைவியைக் காப்பாற்றுவது மிக மிக அவசியம். ஏன்? அவள் உன் வாழ்க்கைத் துணைவி. இம்மைக்கும் — மறுமைக்கும் அவள் உனக்குத் துணையாக நிற்கின்றாள். மனைவி உனக்குச் செய்யும் பணிவிடைகள் கண்ணுக்குத் தெரிந்தவை.

ஆனால் தவமிருந்து, கருவுற்று, பெற்று, பாலூட்டி, மருந்து கொடுத்து, தான் பத்தியமிருந்து செய்த தாயின் உதவிகள், உனது கண்ணுக்குக் காணாதவை. ஆதலின் கடவுள் தாய் போன்றவர். உலகம் மனைவி போன்றது.

உ

முருகா.



— முன் மாதத் தொடர்ச்சி

காக்கை வலிப்புக்கு

இந்த நோயை சிலர் காக்காய் வலிப்பு என்றும் கூறுவார்கள். காக்காய் என்ருல் பறக்கும் காக்காய் என்று நினைப்பார்கள்; இது தவறு! கால்+கை = இது காக்கை என்பதாயிற்று. காலும் கையும் இழுத்து வலித்துக் கொண்டு இருப்பது தான் காக்கை வலிப்பு எனப் பெயர். எனவே இடமறிந்து. பொருள் தெரிந்து, பயன் பெறுதல் நல்லது. இந்த காக்கை வலி நிற்க முறை :— வெள்ளை வெங்காயச் சாறு, வலிப்பு வரும்போது காதுகளில் 4 துளி விட்டு வரவும் அதே சமயம் பேய்ப் பீர்க்கன் சாறு நாசியில் விடவும். இப்படி காக்கை வலிப்பு வரும் போதெல்லாம் செய்ய பூரண குணம் காணும்.

அபான வாயு அடிக்கடி போதலை நிறுத்த

அடிக்கடி அபான வாயு கெட்ட நாற்றத்துடனும், சப்தத்துடனும் ஓயாமல் விட்டுக்கொண்டே இருப்பார்கள். அவர்களுக்கே அந்த நாற்றம் சகிக்க முடியாது இப்படிப்பட்ட வாயுவை சுலபமாகவே நிறுத்த ஒரு முறை :— அடுப்புக் கரியை எடுத்து மைபோல தூளாக்கி வைத்துக் கொண்டு நான்கு சிட்டிகை கரித்தூளுடன் சம அளவு சீனித் தூள் கலந்து காலை மாலை வாயிலிட்டு வெந்நீர் குடித்துவர இந்த அபான வாயு நின்று போகும்.

தேயிலை (டீ) குடிப்பவர்கட்கு உண்டாகும் மலச்சிக்கல் நீங்க

சுக்கு, நிலாவாரை, லவங்கம் வகைக்கு 5 கிராம் வீதம் தட்டி 100 மில்லி தண்ணீரில் போட்டுக் காய்ச்சி வடிகட்டி, சர்க்கரை போட்டு

குடிக்க தேயிலை மணத்தைப் போல நறுமணமும் ருசியும் உண்டாகும். அதோடு மலச்சிக்கலும் இல்லாமல் போகும். உடல் சுறுசுறுப்பும் உண்டாகும்.

தாகம் நீங்க

ஓயாமல் நீர் வேட்கை கொண்டவர்கட்கு அது நீங்க எளிய முறை :— மாந்தளிர் இலை, பனை ஓலை பச்சையாக, நெருஞ்சிக்காய், வில்வப்பழத்தின் சதை, நெற்பொரி, சீரகம், ஏலம் வகைக்கு கால் பலம் எடுத்து தண்ணீர் 1 படி சேர்த்து சுண்டக் காய்ச்சி, ஆறவைத்த பின்னர் குடிக்க தாகம் அடங்கிப் போகும்.

விதை வாத வீக்கம் நீங்க

கச்சக்காய் இலை 1 கைபிடி, நல்ல வெல்லம் 2 பலம் சேர்த்து அரைத்து இரண்டு பலம் நல்லெண்ணெயுடன் கலந்து 3 நாள் 6 வேளை சாப்பிட்டு வர விதை வீக்கம் கரைந்து போகும். இச்சா பத்தியம் அவசியம்.

வேறு முறை

தினமும் 200 மில்லி பசும்பாலுடன் 1 தேக்கரண்டி சிற்றாமணக்கு நெய் கலந்து வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர 40 நாளில் விதை வாத வீக்கம் கரைந்து போகும்.

(தொடரும்)

அநுபவம் உணர்த்தும் உண்மை

V. M. வாசுதேவன், மிராஸ்தார். அரச்சலூர். P. O. ஈரோடு Tk.

மூலிகை மணி ஆசிரியர் அவர்களுக்கு,

எனது மூன்று வயது குழந்தைக்கு ஊசி போட்ட இடத்தில் புண் ஏற்பட்டு ரத்தம், சீழ் வடிந்துக்கொண்டு இருந்தது. அதற்கு ஆங்கில மருந்து போடாமல், தமிழ் மருத்துவ முறைப்படி சோற்றுக் கற்ருழை மடலே கொண்டு வந்து அதன் பாலே தடவி, பற்று போட்டதில் மூன்று நாளில் புண் ஆறி குணமாகிவிட்டது. தங்கள் மூலிகை மணியை படித்து வந்ததினுல் இதன் உபயோகத்தைப் பற்றி தெரிந்தது.

N. A. K. சுப்பிரமணியம், மணி புக் ஸ்டால், 32, பிள்ளை மார் தெரு. விருதுநகர்

அன்புள்ள ஐயா, வணக்கம்.

தங்கள் "நேத்திரப் பூண்டு தைலம்" பார்சலில் கிடைக்கப் பெற்றேன்; நன்றி! எனது வயது 65. சர்க்கரை வியாதி, வாத கோளாறும் உடையவன். காலே, மாலே கண் பார்வை கம்மி, புகை மறைப்பது போல் இருக்கிறது. இப்படி 3, 4-வருடங்களாகவே உள்ளது. கண்ணுடி போட்டால் தெளிவான பார்வை கொடுக்கிறது. கண்ணுடி அணிவதை, கண் ஆபரேஷன் செய்வதை நான் விரும்பவில்லே. 20 நாட்களுக்கு முன் தங்கள் நேத்திரப் பூண்டு தைலத்தை 3-நாட்கள் கண்களில் விட்டுக் கொண்டேன். (கண்கள் எரிச்சல் தாங்கக் கூடியாத இல்லே) மூன்று தினத்திலேயே நான்கு வருடங்களாக இருந்த பார்வைக் குறைவு நீங்கி, மீண்டும் பார்வை நன்கு தெரிவதைக் கண்டு மிக்க ஆச்சர்ய மகிழ்ச்சி அடைந்தேன். நான் விவசாய வேலேயாக கிராமத்திற்கு சென்றபோது, எனது கண்கள் நன்கு பார்வை தெரிவதைக் கண்டு அங்குள்ளவர்களும் ஆச்சர்யமடைந்தார்கள். எனது குறைவான பார்வை நீங்கியது. தங்களுக்கும், ஆண்டவனுக்கும் எனது மகிழ்ச்சி வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இதய ஒலி!

வி. குமாரவேலு, ஆசிரியர், 7—1—74
அரசினர் ஆரம்பப் பள்ளி, பூ மாம்பாக்கம் கிராமம்,
மதியநூர்.P. O.

நோய் வாயில் அகப்பட்டு அல்லலுறும் மக்களைக் காப்பாற்ற கங்கணம் கட்டிக்கொண்டு தொண்டு புரியும் பெரியீர்! வணக்கம். பல கோடி மக்களை சுகத்துடன் வாழ வழிகாட்டும் உங்கள் தொண்டு நீடுழி வாழ முருகனை பிரார்த்திக்கிறேன்.

இப்படிக்கு, வி குமாரவேலு.

T. மகாலிங்கம், 3—1—74
வில்லியநல்லூர். P. O.

அன்புமிகு ஆசிரியர் அவர்கட்கு, வணக்கம்.

தங்களது தலைமகன் திரு. க. வேங்கடேசன் அவர்களின் திருமணம் திருமுருக. வாரியார் அவர்களின் அருளாசியுடன் நடக்க இருப்பது கண்டு மட்டில்லா மகிழ்வெய்துகின்றேன். அதுவும் தணிகையில், திருமுருக கிருபானந்தவாரியார் முன்னிலையில் நடத்த இருப்பது மிக மிக பொருத்தமே. நம் மூலிகை மணி வாசக அன்பர் குழாம் பலரும் நிச்சயம் இதில் பங்கு எடுத்துக் கொள்வர்களென்பதில் ஐயமில்லை! தணிகை ஏற்பாடு ஒரு கல்லில் இரண்டு மாங்காய் போன்றதே. அன்பர்களுக்கு முருகன் அருளைப் பெற ஒரு அரிய வாய்ப்பு. மனப்பிணி தீரும்; உடற் பிணி தீர்க்கும் மனித தெய்வத்திற்கு நன்றிக் கடன் செலுத்த ஒரு அரிய வாய்ப்பாகும்.

அன்புள்ள, T. மகாலிங்கம்.

செ. கு. சுவாமி, 2—1—74
வந்தவாசி. P. O.

அன்புள்ள டாக்டர் அவர்களுக்கு, வணக்கம்.

தங்கள் பத்திரிகையை லைப்ரரியில் கண்டேன். தங்கள் பத்திரிகையை நான் பார்க்கும் போதெல்லாம் இது என்னடா! என்னவோ மூலிகை மணியாம் என்று விட்டு விடுவது வழக்கம். ஒரு நாள் தற்செயலாக அதை எடுத்துப் படித்தேன். அப்போது தான் அதன் மகிமையை நான் புரிந்துக் கொண்டேன். முதலில் தங்கள் பத்திரிகையை வெறுத்த நான் இப்போது லைப்ரரியில் நுழைந்தவுடன் தங்களின் 'மூலிகை மணி' யைத் தேடுகிறேன்.

இப்படிக்கு, செ. கு. சுவாமி.

மூலிகை மணி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவரும், ஆசிரியரும் வேலூர் மங்கத்துவர் ஆ. ரா கண்ணப்பர், 59, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-632001 (வ. ஆ)